DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. - 69/2025

Prosecution PW -1

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சுரேஷ்குமார் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 04.08.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A3 present.

<u>முதல் விசாரணை</u>

நான் தேவாணாம்பட்டிணம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.02.2025 ம் தேதி காலை 10.00 மணிக்கு நானும், உதவி ஆய்வாளர் திரு. சுப்பிரமணியன், சிறப்பு உதவி ஆய்வாளர் சாமிநாதன் ஆகியோர் தேவாணாம்பட்டிணம் காவல் நிலைய பணியில் இருந்த போது, உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன் அவர்களுக்கு இரகசிய தகவலாளி கைபேசி மூலம் தேவணாம்பட்டிணம் வள்ளுவர் சுடுகாட்டில் 3 நபர்கள் கஞ்சா விற்பதாகவும் தாங்கள் வந்தால் அடையாள்ம் காட்டுவதாகவும் கூறிய தகவலை புதுநகர் வட்ட ஆய்வாளர் அவர்களிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்று முன் அனுமதி கடிதம் தயார் செய்து நிலைய தலைமைக் காவலர் கவிதா என்பவர் மூலம் ஒப்படைத்துவிட்டு கஞ்சா ரைடுக்கு தேவையான அனைத்து உபகரணங்களையும் எடுத்துக்கொண்டு நானும் சாமிநாதனும் ஒரு இருசக்கர வாகனத்திலும், உதவி ஆய்வாளர் சுப்பிரமணியனும், சிறப்பு உதவி ஆய்வாளர் தம்பிராஜனும், ஒரு இருசக்கர வாகனத்திலும் காவல் நிலையத்திலிருந்து 10.40 மணிக்கு புறப்பட்டு தேவணாம்பட்டிணம் வள்ளுவர் சுடுகாட்டிற்கு 11.00 மணிக்கு சென்றபோது, அங்கிருந்த இரகசிய தகவலாளி கஞ்சா விற்றுக்கொண்டிருந்த 3 நபர்களை அடையாளம் காட்டிவிட்டு சென்று விட்டார். அந்த 3 நபர்கள் உதவி ஆய்வாளர் பார்ட்டி சகிதம் பிடிக்க சென்ற போது, அதில் 2 நபர்கள் தப்பித்து ஓடிவிட்டார்கள். ஒருவரை மட்டும் பிடித்து விசாரிக்க, அவர் தன் பெயர் ரமனா என்று பெயர் விலாசத்துடன் கூறினார். தப்பி ஓடியவர்களை குறித்து விசாரிக்க ஒருவர் பெயர் நிவாஷ் என்றும், மற்றொருவர் பெயர் ராஜேஷ் என்றும் அவர்களின் பெயர் மற்றும் விலாசங்களுடன் கூறினார். பின்பு உதவி ஆய்வாளர் அவரிடம் நீங்கள் கஞ்சா வைத்திருப்பதாக நம்பத்தகுந்த தகவல் கிடைத்துள்ளது. உன்னையும், உனது உடைமைகளையும் சோதனை செய்ய வேண்டும், அவ்வாறு சோதனை செய்ய நீதித்துறை நடுவர் முன்போ, அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன்போ, சோதனை செய்து கொள்ள உனக்கு சட்டஉரிமை உண்டு என எடுததுக்கூறி எழுத்து

மூல சோதனை அறிவிப்பு நமுனா வழங்கினார். அதில் நானும், சுவாமிநாதனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். 1வது எதிரியும், உதவி ஆய்வாளரும் கையொப்பம் செய்தார்கள். அந்த சோதனை அறிவிப்பு நமுனா அதசஆ.**1**. அந்த அறிவிப்பு நமுனாவை பெற்றுக் கொண்ட எதிரி அவ்வாறு எங்கும் அழைத்துச் செல்ல தேவையில்லை. உதவி ஆய்வாளராகிய தாங்களே சோதனை செய்யலாம் என சம்மதம் தெரிவித்தார். அதை உதவி ஆய்வாளர் எழுத்து மூலமாக பதிவு செய்து எதிரியிடம் கையொப்பம் பெற்றார். அதில் நானும், சாமிநாதனும் சாட்சி கையொப்பம் செய்தோம். பின்னர் உதவி ஆய்வாளர் கையொப்பம் செய்தார். அந்த சோதனை சம்மத கடிதம் அதசஆ.**2** . பின்னர் எதிரியை சோதனை செய்ய அவர் வைத்திருந்த வெள்ளை நிற பாலிதின் பைக்குள் பச்சைநிற பாலிதின் பையால் மூடப்பட்டிருந்தது. அந்த பச்சைநிற பையை நீக்கி பார்த்த போது அதில் காய்ந்த நொருங்கிய நிலையில் இலை,காய்,பூ, மொட்டு போன்ற தாவரப்பொருள் காணப்பட்டது. அதில் உதவி ஆய்வாளர் அவர்கள் சிறிது எடுத்து நுகர்ந்து பார்கையில் கஞ்சா வாடை வீசியது. உதவி ஆய்வாளர் எதிரி ரமனாவை கஞ்சா வைத்திருந்த குற்றம் காரணம் கூறி கைது செய்து கைது நமுனா தயார் செய்தார். அந்த கைது நமுனாவில் நானும், சாமிநாதனும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைது நமுனா அதசஆ **3**. பின்னர் எதிரி வைத்திருந்த கஞ்சாவை நாங்கள் எடுத்துச்சென்ற எடை மிசினில் எடை போட்டு பார்க்க 1.200 கிலோகிராம் கஞ்சா இருந்தது. அதே பையில் சிறுசிறு பாலிதின் பைகள் 20 எண்ணிக்கையில் இருந்தது. பின்னர் உதவி ஆய்வாளர் மகசர் தயார் செய்து 13.00 மணிக்கு கஞ்சாவையும், சிறுசிறு பாலிதின் பைகள் இருபதையும் மகசரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் எதிரி ரமனாவிடம் கையொப்பம் பெற்றார். சாட்சிகளாக நானும், சாமிநாதனும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசர் அதசஆ.**4**. சிறுசிறு பாலிதின் பைகள் 20 எண்ணிக்கை சாபொ.**1**. மூடியிருந்த பச்சைநிற பாலிதின் பை சாபொ.**2**. பின்னர் வெள்ளைநிற பாலிதின் பையிலிருந்த கஞ்சாவை ஒரு மஞ்சள் நிற துணிப்பையில் கொட்டி வெள்ளை நிற நூலால் கட்டி SHO சீல் வைத்தார். பின்னர் அதில் ஒரு வெள்ளை நிற சிலிப் தயார் செய்து ஒட்டி அதில் சாட்சிகளாக நானும் சாமிநாதனும் கையொப்பம் செய்தோம். எதிரி ரமனாவும் கையொப்பம் செய்தார். இந்த நிகழ்வுகள் அனைத்தையும் சிறப்பு உதவி ஆய்வாளர் தம்பிராஜன் என்பவர் அவருடைய செல்போனில் விடியோவாக பதிவு செய்தார். பின்னர் சம்பவ இடத்திலேயே உதவி ஆய்வாளர் எதிரியை விசாரிக்க, எதிரி எவ்வித துன்புறுத்தலோ, அச்சுறுத்தலோ இன்றி தமாக முன்வந்து கொடுத்தத ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்பாகவும், சாமிநாதன் முன்பாகவும் உதவி ஆய்வாளர் பதிவு செய்தார். பின்பு எதிரி மற்றும் தடய சொத்துடன் 15.00 மணிக்கு நிலையம் வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அதற்கு நான் உதவியாக இருந்தேன். பின்னர் கடலூர் புதுநகர் வட்ட ஆய்வாளர் நிலையம் வந்து வழக்கு கோப்புகளைப் பார்வையிட்டு, 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை நானும், சாமிநாதனும் அடையாளம் காட்ட ஆய்வாளர் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பார்வை மகசரில் நானும் சாமிநாதனும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகசர் அதசஆ**.5.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

நிலையத்திலிருந்து சம்பவ இடம் செல்லும் போது ஆய்வாளர் நிலையத்தில் இல்லை. சம்பல இடத்தில் அனைத்து நடவடிக்கைகளையும் முடித்து நிலையம் வந்து தான் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார் என்றால் சரிதான். இரகசிய தகவலாளி சம்பவ இடத்திற்கு வந்தார். நான் போகும் போதே சம்பவ இடத்தில் இரகசிய தகவலாளி இருந்ததார். சம்பவ இடத்தில் இரண்டு மூன்று நபர்கள் வந்து போய் கொண்டு இருந்தார்கள். எதிரிகளை இரகசிய தகவலாளி சுமார் 5மீ தொலைவில் இருந்து அடையாளம் காட்டினார். சம்பவ இடத்தில் தான் சிறு சிறு பாலிதின் கவர்கள் 20 எண்ணிக்கைகள் மற்றும் பச்சை நிற பாலிதின் பைகளைக் கைப்பற்றினோம். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட பாலிதின் பையில் குற்ற என் சட்டபிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாபொ 1ல் தேதி நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சுமார் ஒரு மணி நேரம் இருந்தோம். சோதனை அறிவிப்பு சம்மத கடிதத்தை உதவி ஆய்வாளர் தயார் செய்தார். நான் போட்ட கையொப்பம் எனில் தேதியிட்டு கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் பச்சைநிற பாலிதின் கவரை கைப்பற்றியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மாதிரி கஞ்சாவை நான் தான் வட்டார தடயவியல் ஆய்வகத்தில் ஒருமுறை ஒப்படைத்தேன். சொன்ன நேரம் நாள் எந்த தகவலும் வரவில்லை என்றாலும், 1வது எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எந்த தடய பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் தடய பொருட்களும் காவல் நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒப்பம்/ஜி. சுந்தரராஜன், B.Sc., B.L.,)

கூடுதல் மாவட்ட (ம)அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்